Judicial Form No.53
(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No - 28/2019 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW23 |
| | | Defence |
| | | Court |
| Name | : மரு.கணேஷ்குமார் | |
| Father / Husband Name | : மூர்த்தி | |
| Village | : மதுரை | |
| Taluk | : மதுரை | |
| Caste | : | |
| Calling | : உதவி பேராசிரியர் | |
| Religion | : இந்து | |
| Age | : 39 | |

( 2, 3, 4, 5, 6 எதிரிகள் ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 29.01.2025

முதல் விசாரணை :–

நான் தற்போது அரசு ராஜாஜி மருத்துவமனையில் உதவி பேராசியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.12.2017 ம் தேதி நான் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது நரிக்குடி காவல் ஆய்வாளர் வேண்டுகோளின் பேரில் சுமார் 17 வயதுடைய செல்லப்பாண்டி என்பவரின் பிரேதத்தின் மீது பகல் 12.30 மணிக்கு பிரேத பரிசோதனை மேற்கொண்டேன். பிரேதமானது விரைப்பு தன்மையுடன் காணப்பட்டது. கை, கால்கள் நீட்டிய நிலையிலும், வாய் மூடிய நிலையிலும் குத்து காயங்களுடனும் காணப்பட்டது. உறைந்த இரத்தமானது கழுத்து, முகம் மற்றும் வலது தோல்பட்டையில் காணப்பட்டது. வெளிக்காயங்கள் மொத்தம் 26 கத்தி குத்து காயங்கள் காணப்பட்டது.

1) வலது பக்க கழுத்து காரை எலும்பில் இருந்து 5 செமீ மேல் பக்கம் 2 X 2 x8 செமீ அளவில் குத்துக் காயம் முக்கிய இரத்தக்குழலில் சேதம் பட்டு இரத்தம் வெளியேறி காணப்பட்டது.

2) தொண்டை எலும்புக்கு மேல் பகுதியில் 1.5 X 1.5 X 7.5 செமீ அளவில் குத்துக் காயம் தைராய்டு மற்றும் ஹையாய்டு எலும்பை பாதிக்கப்பட்டு இருந்தது.

3) நடுக்கழுத்தில் 1.5 X 1.5 X 3 செமீ அளவில் குத்துக் காயம் மூச்சு குழாயை பாத்திக்கப்பட்டு இருந்தது.

4) நடுக்கழுத்தில் 1.5 X 1.5 X 2 செமீ அளவிலான குத்துக்காயம் காணப்பட்டது.

5) 2 X 2 X 7 செமீ அளவிலான குத்துக் காயம் இடது பக்க காரை எலும்பிற்கு மேல் முக்கிய இரத்தக்குழாய்களை பாதிக்கப்பட்டு வலது பக்க கழுத்து வரை காணப்பட்டது.

6) 2 X2 X 3 செமீ அளவிலான குத்துக் காயம் இடது பக்க கழுத்தில் முக்கிய இரத்தக் குழாய்கள் பாதிக்கப்பட்டு இருந்தது.

7) 1.5 X 1.5 X 2 செமீ அளவிலான குத்துக் காயம் இடது பக்க கழுத்தில் குரல் வலை எலும்பிற்கு கீழ் பாகத்தில் காணப்பட்டது.

8) 0.5 X 0.5 X 0.5 செமீ அளவிலான குத்துக் காயம் இடது தோல்பட்டையில் காணப்பட்டது.

9) 0.5 X 0.5 X 0.5 செமீ அளவிலான குத்துக் காயம் இடது பக்க மார்பில் காணப்பட்டது.

10) 0.5 X 0.5 X 2 செமீ அளவிலான குத்துக் காயம் இடது மார்பு பகுதியில் சதைகள் பாதிக்கப்பட்டு இருந்தது.

11) 0.5 X 0.5 X 0.5 செமீ அளவிலான இரு குத்துக் காயங்கள் உள்பக்க தொடையில் காணப்பட்டது.

12) 1 X 1 X 3 செமீ அளவிலான குத்துக் காயம் உள்பக்க தொடையில் காணப்பட்டது.

13) 0.5 X 0.5 X 0.5 செமீ அளவிலான 3 குத்துக் காயங்கள் ஆண் உறுப்பிற்கு கீழ் காணப்பட்டது.

14) இடது பக்க மணிக்கட்டிற்கு மேல் 0.5 X 0.5 X 0.5 செமீ அளவிலான ஆழமான சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

15) 0.3 X 0.3 X 0.3 செமீ அளவிலான 8 குத்துக்காயங்கள் விதைப்பையில் காணப்பட்டது.

16) 0.5 X 0.5 X 0.5 செமீ அளவிலான குத்துக் காயம் இடது விலா எலும்பிற்கு மேல் காணப்பட்டது.

17) இரைப்பை மற்றும் அதில் உள்ள திரவம் சிறுகுடல் அதில் உள்ள திரவம் கல்லீரலில் ஒரு பகுதி ஒரு சிறுநீரகம் மற்றும் பதப்படுத்தப்படும் திரவம் ஆகியவற்றை இராமநாதபுரம் வட்டார தடய ஆய்வகத்திற்கு ஆய்வுக்காக அனுப்பி வைத்தோம். அதில் எந்தவித நச்சு தன்மையும் காணப்படவில்லை என்று அறிக்கை பெறப்பட்டது. அந்த அறிக்கை நீ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்று **அ.சா.ஆ 16**. இந்த பிரேதம் கழுத்து பகுதியில் முக்கிய இரத்தக் குழாய்கள் பாதிக்கப்பட்டு மூச்சு குழாய் பாதிக்கப்பட்டு அதிக இரத்த விரயத்தினாலும் மரணம் ஏற்பட்டிருக்கும் என்று நான் வழங்கிய இறுதி கருத்துரை **அ.சா.ஆ 17**. போலீசார் விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது பிரேத பரிசோதனைக்கு முன்பு சுமார் 36 மணி நேரத்திற்கு முன் இறப்பு ஏற்பட்டியிருக்கும் என்று நான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன். சுமார் என்றால் 1/2 மணி நேரம் முன்பு அல்லது பின்பு ஆகலாம். கத்தியினால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. என்னிடம் ஆய்வாளர் காண்பித்த கத்தியினால் ஏற்பட வாய்ப்புண்டு என்று சொன்னேன். ஆனால் அந்த கத்தி தான் என்று அறுதியிட்டு சொல்லமுடியாது.

Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No - 28/2019 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW24 |
| | | Defence |
| | | Court |
| Name | : பாலமுருகன் | |
| Father / Husband Name | : செங்கோட்டைதுரை | |
| Village | : பறவை | |
| Taluk | : மதுரை | |
| Caste | : | |
| Calling | : ஆட்டோ ஓட்டுனர் | |
| Religion | : இந்து | |
| Age | : 50 | |

( 2, 3, 4, 5, 6 எதிரிகள் ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 29.01.2025

முதல் விசாரணை :–

நான் தற்போது பறவையில் குடியிருந்து வருகிறேன். ஆட்டோ ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். நான் 2010 ம் வருடம் மகேந்திரா அல்பா என்ற TN 59 AB 8560 என்ற எண் கொண்ட ஆட்டோ ரிக்ஷாவை மகேந்திரா கம்பெனியில் இருந்து வாங்கினேன். இன்டஸ் இன்ட் என்ற நிறுவனத்தில் அந்த ஆ ட்டோவிற்கு நிதி உதவி வாங்கினேன். 2014 ம் வருடம் எனக்கு பணம் தேவை வந்ததால் பஞ்சரஷம் மகன் சுதர்ஷன் என்பவருக்கு ரூ.60000/–க்கு விற்பனை செய்தேன். ஆவணங்களை கொடுத்துவிட்டேன் பெயர் மாற்றவில்லை. 2017 ம் வருடம் அந்த ஆட்டோ கொலை கேஸ்சில் மாட்டியதாக சொல்லி பினான்ஸ் நிறுவனத்தில் இருந்து என்னிடம் சொல்லி பணம் கேட்டார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

ஆஜர் எதிரிகளை தெரியாது.

Judicial Form No.53
(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No - 28/2019 |
| Deposition of Witness of PW | : | Prosecution - PW25 |
| | | Defence |
| | | Court |
| Name | : ஸ்ரீகாந்த் | |
| Father / Husband Name | : பாலகிருஷ்ணன் | |
| Village | : கன்னியாகுமரி | |
| Taluk | : கன்னியாகுமரி | |
| Caste | : | |
| Calling | : இரண்டாம் நிலை காவலர் | |
| Religion | : இந்து | |
| Age | : 32 | |

( 2, 3, 4, 5, 6 எதிரிகள் ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 29.01.2025

முதல் விசாரணை :–

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம் ஆயுதப்படை பிரிவில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நரிக்குடி காவல்நிலையத்தில் பயிற்சி காவலராக பணியில் இருந்த போது இவ்வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் பென்ட்ரைவை என்னிடம் கொடுத்து அதில் காணப்படும் விடுதியில் 17.12.2017 முதல் 18.12.2017 ம் தேதி வரை எந்த எந்த நபர்கள் உள்ளே சென்றார்கள் என்றும், வெளியே வந்தார்கள் என்றும் சிறுசு ஆக்கி பிடிஎப் பைல் ஆக மாற்றிக்கொடுக்கப்படி சொன்னார். நான் அதை அவ்வாறு மாற்றி பென்ட்ரைவ்வை அவரிடம் கொடுத்தேன். அதன் புகைப்படங்களையும் எடுத்துக்கொடுத்தேன். நான் எடுத்துக்கொடுத்த புகைப்படம் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அ.சா.ஆ 18**. அதில் ஆஜர் எதிரி குணசேகரபாண்டியன் உள்ளார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

ஆய்வாளர் என்னிடம் பென்ட்ரைவ் தான் கொடுத்தார். ஹார்டுடிஸ்க்கில் இருந்தோ மெமரி கார்டில் இருந்தோ தான் பென்ட்ரைவ்விற்கு மாற்றம் செய்யமுடியும் என்றால் சரிதான். ஹார்டுடிஸ்க்கில் இருந்து பென்ட்ரைவ்விற்கு யார் நகல் பதிவு செய்தார் என்று எனக்கு தெரியாது. அ.சா.ஆ 18 ல் குறிப்பிட்ட லாட்ஜில் தான் பதிவு செய்யப்பட்டது என்று குறிப்பு இல்லை. நான் ஆய்வாளர் விசாரணையில் முப்பிடாதி என்ற ஒரு எதிரி இருந்ததாக சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை. புகைப்படத்தில் முப்பிடாதி உள்ளாரா என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளில் முப்பிடாதி என்பவர் உள்ளாரா என்று தெரியாது.

அ.சா.ஆ 18 ல் எதிரிகள் 7 பேர்கள் உள்ளாரா என்றால் எனக்கு ஆஜர் 2 வது எதிரியை மட்டும் தான் அடையாளம் தெரியும். முப்பிடாதி என்பவர் புகைப்படத்தில் இல்லை என்றால் தெரியாது. உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.